# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.47 (L.W.77)

| Name | **கணேசன்** | Caste | |
|---|---|---|---|
| Father's Name | N.P.Thevan | Calling | |
| Village | Ammapettai | Religion | Hindu |
| Taluk | Uthamapalayam | Age | 67 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.03.2025.

(A1 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.40 P.M.**

நான் ஆம்பூர் காவல் கோட்டத்தில் துணை கண்காணிப்பாளராக கடந்த 16.09.2013 முதல் 31.01.2016 வரை பணி செய்தேன். நான் பணியில் இருந்தபோது ஆம்பூர் தாலுக்கா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கிராமத்தில் சின்னபையன் என்பவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக மேற்படி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 208/2015 உறவினர்கள் குற்றவாளியை கைது செய்ய வேண்டி சாலை மறியல் செய்து சட்ட ஒழுங்கை சீரழித்தால் அந்த வழக்கில் குற்றவாளியை கைது செய்து மாவட்ட காவல் அதிகாரி உத்தரவின் பெயரில் பள்ளிக்கொண்டா காவல் வட்ட ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் ஆஜர் எதிரிகள் அடங்கியவர்கள் தனி குழுவாக நாகராஜ், முனியன் ஆகிய ஐந்து பேர் அடங்கிய தனி கமிட்டி

போட்டு குற்றவாளியை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆஜர் எதிரிகளை தெரியும். அந்த தனிப்படையினர் அந்த வழக்கின் எதிரி மற்றும் அது தொடர்பாக நபர்களை கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

தொடர்ந்து இந்த வழக்கில் அப்போது பணிபுரிந்துவந்த மதுவிலக்கு அமல் பிரிவு துணை கண்காணிப்பாளர் திரு. தங்கவேல் அவர்கள் குற்ற சம்பவத்தில் ஒரு எதிரியாக இருந்த நிலையில் அவரை கைது செய்யும் பணியிலும் தொடர்புடைய நபர்களை கண்டுபிடிக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தார்.

அதன் பிறகு மேற்படி டிஎஸ்பி தங்கவேல் அவர்களை போலீஸ் காவலில் எடுத்து ஆம்பூர் மகளீர் காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்கும் பணியில் சேடோ டியூட்டியில் இருந்தார். இந்நிலையில் 19.05.2015 அன்று பள்ளிக்கொண்டா காவல் நிலைய சிறப்பு உதவியாளர் ரவி அவர்கள் இரவு தொலைபேசி வாயிலாக அக்காவல் நிலைய குற்ற எண். 140/15 என்ற வாக்கில் ஷமீல் பாஷா என்பவரை விசாரித்ததாகவும் மேற்படி தனிப்படையினர் விசாரித்ததாகவும் ஆஜர் எதிரிகள் தான் அந்த தனிப்படையினர் பின்பு அவருடைய மாமாவிடம் பைன்ட் ஓவர் செய்ததாக அதன் பிறகு அவர் ஆம்பூர் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருப்பதாகவும் தொடர்ந்து மேல் சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாகவும் பின்பு 27.05.2015 அன்று மேற்படி ஷமீல் பாஷா சென்னை மருத்துவமனையில் இறந்துவிட்டதாகவும் தகவல் கிடைத்தது. அதன்பிறகு பொறுப்பு ஆய்வாளர் கோவிந்தசாமி அவர்கள் மேற்படி பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் எனக்கு நினைவில்லை.

176 கு.வி.மு.ச வழக்கு பதிவு செய்து மேல் விசாரணைக்கு அனுப்பிவைத்ததாகவும் தெரிவித்தார். பின்பு இந்த வழக்கினை 01.07.2015 அன்று மேல் விசாரணைக்காக மாவட்ட குற்ற பிரிவு சிபிசிஐடிக்கு மாற்றம் செய்யபட்டது. இது தொடர்பாக 27.04.2016 அன்று சிபிசிஐடி துணை கண்காணிப்பாளர் என்னிடம் விசாரித்தார்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி: நான் ஆம்பூர் டிஎஸ்பியாக பணியாற்றியபோது பள்ளிக்கொண்டா காவல் நிலையம் என்னுடைய கட்டுபாட்டில் இருந்தது என்றால்?

பதில்: சரிதான்.

கே: 28.05.2015 குற்ற எண் 208/2015 ஆம்பூர் தாலுக்கா காவல் நிலையத்திற்குரியது என்றால் ?

ப: சரிதான்.

கே: அந்த வழக்கில் எதிரிகளை கண்டுபிடிக்க 28.05.2015ல் ஒரு சிறப்புக்குழுவை உயர் அதிகாரிகளின் அனுமதியோடுதான் நியமிக்கப்பட்டது என்றால் ?

ப: சரிதான்.

கே: மேலே சொன்ன குற்ற எண் 208/2015 என்பது தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களை தொடர்ந்து ஒரு வழக்கு என்றால் ?

ப: அந்த வழக்கில் தொடர்புடையவர்கள் மூன்று மாநிலங்களில் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

கே: மேற்கண்ட சிறப்புக்குழுவில் இருந்த அனைவரும் வெவ்வேற காவல் நிலையங்களிலிருந்து உயர் அதிகாரிகளின் அனுமதியோடு அழைத்து சேர்க்கப்பட்டனர் என்றால் ?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட சிறப்புக்குழு உங்களுடைய மேற்பார்வையின் கீழ்தான் இயங்கியது என்றால் ?

ப: சரிதான்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 140/2015 Woman Missing என்ற வழக்கு தொடர்பான புகாரினை பள்ளிக்கொண்டா காவல் நிலைய எஸ்எஸ்ஐ ரவி என்பவர் பெற்று வழக்கை பதிவு செய்து விசாரணை செய்தார் என்றால் ?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 140/2015 வழக்கு தொடர்பான விசாரணை குறித்து நிலைய பொது நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் ?

ப: சரிதான்.

கே: யார் யார் எந்தெந்த தேதியில் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்கள் என்ற தகவலையும் நிலைய பொது நாட்குறிப்பேட்டில் பதிய வேண்டும் என்றால் ?

ப: சரிதான். விசாரணை செய்யும் அதிகாரி அதை பதிவு செய்ய வேண்டும்.

கே: மேற்கண்ட Woman Missing வழக்கில் விசாரணை செய்த எஸ்எஸ்ஐ ரவி என்பவர் 19.06.2015 அன்று ஷமீல் பாஷா என்ற நபரை ஆஜர் முச்சலிக்கா (Bind over) செய்து அனுப்பினார் என்றால் ?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட எஸ்எஸ்ஐ ரவி மேற்கண்ட ஷமீல் பாஷாவை மதியம் 01.00 மணிக்கு Bind Over செய்து அனுப்பியதாக அ.த.சா.ஆ.3 மற்றும் 4–ல் உள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேடு/காயச்சான்றில் ஷமீல் பாஷா 19.06.2015 அன்று மாலை 04.30 மணிக்கு ஆஜராகி உள்ளதாக அ.த.சா.ஆ.47–ல் உள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: 19.06.2015 ஷமீல் பாஷா உள்நோயாளியாக மாலை 04.30 ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்றால் ?

ப: சரிதான்.

கே: 19.06.2015 உள்நோயாளியாக இருந்த ஷமீல் பாஷா ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து Absconding ஆகிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் ?

ப: ஆம்பூர் அரசு மருத்துவமனையின் இட்டிமேஷன் ரிஜிஷ்டரில் வரிசை எண் 353–ல் Absconding (எ.த.சா.ஆ.4) என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கே: ஷமீல் பாஷா திரும்ப மீண்டும் மருத்துவமனைக்கு எப்போது வந்தார் என்ற குறிப்பு ஏதும் இன்டிமேஷன் ரிஜிஷ்டரில் இல்லை என்றால் ?

ப: சரிதான்.

கே: மேலே குறிப்பிட்ட Absconding பிறகு ஷமீல் பாஷாவினுடைய மருத்துவமனை சிகிச்சை குறித்து தாங்கள் உரிய காவலர் வழியாக ஆவணங்களை 21.06.2015 அன்று பெற்றீர்களா என்றால் ?

ப: சரிதான்.

கே: தாங்களால் உரிய காவலர் வழியாக பெறப்பட்ட மருத்துவ ஆவணங்களை சிறப்பு குழுவில் பணியாற்றி வந்த ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அவர்களிடம் கொடுத்து அது குறித்து விசாரணை செய்தீர்களா என்றால் ?

ப: அது பள்ளிக்கொண்டா காவல் நிலைய வழக்கு என்பதால் சம்பந்தப்பட்ட ஆய்வாளர் (1–ம் எதிரி) அவர்களை விசாரிக்கச்சொன்னேன்.

கே: அதற்கான ஒளி நகல் ஆவணத்தை சாட்சியிடம் காட்டி அந்த ஆவணத்தில் ஷமீல் பாஷாவின் விபத்து பதிவேடு, அப்ஷ்காண்டிக் பதிவேடு, சிகிச்சை அளித்ததற்கான ஆவணங்கள்தானா என்று கேட்டார் ?

ப: சாட்சி அதை பார்த்து ஒத்துக்கொள்வதால் அது எ.த.சா.ஆ.6 ஆக அதில் மொத்தம் 12 தாள்கள் உள்ளது குறியீடு செய்யப்படுகிறது.

(அரசு தரப்புக்கு அந்த ஆவணத்தின் ஒரு நகல் வழங்க உத்தரவிடப்பட்டது)

கே: என்னுடைய கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் 2 வது பக்கத்தில் "மேற்படி தனிப்படையில் இருந்த ஆளினர்கள் (உறுப்பினர்கள்) 19.06.2015 தேதி வரை தனிப்படை அலுவலில் இருந்தனர்" என்று சிபிசிஐடி துணைக் கண்காணிப்பாளர் 27.04.2016 செய்த விசாரணையில் சொல்லியுள்ளீர்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: டிஎஸ்பி தங்கவேல் செம்மரக்கடத்தல் வழக்கு தொடர்பாக சிறையில் இருந்தவரை காவல் விசாரணைக்காக எடுத்து விசாரணை செய்தீர்கள் அப்போது 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் எனக்கு உறுதுணையாக இருந்தார் என்றால் ?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட தங்கவேல் டிஎஸ்பி அவர்களை விசாரணை முடிந்து மீண்டும் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து சிறைக்கு கொண்டு சென்று விடுகிற வரை என்னோடு உறுதுணையாக இருந்தார் என்றால்?

ப: சரிதான்.

கே: சிறப்புக்குழுவினர் விசாரித்ததாக ரவி எஸ்எஸ்ஐ என்னிடம் கூறினார் என்று முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறீர்கள் ஆனால் அதற்கான ஆவணங்கள் எதையாவது எஸ்எஸ்ஐ ரவி என்னிடம் சமர்ப்பித்தாரா என்றால் ?

ப: ஆவணங்கள் எதையும் காட்டவில்லை.

கே: காவலர்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் பள்ளிக்கொணடா காவல் நிலையத்திற்கு உரிமையுடையதாக ஜூன் 2015 வாக்கில் எந்த ஒரு குடியிருப்பும் இல்லை எல்லா குடியிருப்புகளும் சிதலமடைந்த நிலையில் இருந்தது என்றால் ?

ப: குடியிருக்க தகுதியற்றதாக இருந்தது.

கே: ஆய்வாளர் கோவிந்தசாமி குற்ற எண் 158/2015 பதிவு செய்ததாக என்னுடைய முதல் விசாரணையிலும் என்னுடைய கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் அந்த புகாரினை என்னிடம் கோவிந்தசாமி ஆய்வாளர் காட்டினாரா என்றால் ?

ப: என்னிடம் காட்டவில்லை.

கே: ஆய்வாளர் கோவிந்தசாமி ஷமீல் பாஷாவினுடைய மரணம் குறித்து எத்தனை புகார்கள் பெற்றார் என்று சொன்னாரா என்றால் ?

ப: சொல்லவில்லை.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையமும் என்னுடைய ஆளுமைக்கு கீழ் தான் இருந்தது என்றால் ?

ப: ஆமாம். இருந்தது.

கே: 26.06.2015 அன்று ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளரான சரவணன் ஷமீல் பாஷாவின் மரணம் குறித்து எத்தனை புகார்கள் வாங்கினார் என்று சொன்னாரா என்றால் ?

ப: சொல்லவில்லை.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

சிபிசிஐடி டிஎஸ்பி பதவிக்கும் என்னுடைய பதவிக்கும் என்ன வித்தியாசம் என்றால் நான் சட்டம் ஒழுங்கு தொடர்பான ஒரு உட்கோட்ட டிஎஸ்பி ஆவேன். சிபிசிஐடி டிஎஸ்பி என்பவர் சிறப்பு குற்ற வழக்குகளை விசாரிக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறப்பு அமைப்பாகும். எனக்குக் கீழ் ஆம்பூர் நகரம், ஆம்பூர் கிராமியம், பள்ளிக்கொண்டா காவல் நிலையம், அணைக்கட்டு, வேப்பங்குப்பம், உமாராபாத், அனைத்து மகளீர் காவல் நிலையம், போக்குவரத்து பிரிவு காவல் நிலையம் ஆகியவை அடங்கும்.

டிஐஜி அவர்களுக்கு இரண்டு மாவட்டத்திற்கு வரை அவருடைய ஆளுமை உள்ளது. சிறப்பு வழக்குகளில் மற்ற பகுதியிலிருந்து காவல் அதிகாரிகளை அந்த சிறப்புப் புலன் விசாரணை குழுவில் உறுப்பினராக நியமிப்பதற்கு மாவட்ட கண்காணிப்பாளர் பரிந்துரையின் பெயரில் டிஐஜி அவர்கள் அவருடைய எல்லைக்குட்பட்ட பகுதியிலிருந்து நியமிக்கலாம்.

ஒரு மாவட்ட கண்காணிப்பாளர் மற்ற மாவட்டத்திலிருந்து காவலர்கள் மற்றும் சிறப்பு உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தேவைப்படின் அவர்களுக்குள் அலுவலக கடிதம் மூலம் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு காவல் ஆய்வாளர்கள் தேவைப்படின்

சரக டிஐஜி உத்தரவின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம். சாதாரணமாக காவல் நிலையத்தில் உள்ள போலீஸ்காரர்களுக்கும் சேடோ டியூட்டியில் இருக்கக்கூடிய காவலர்களுக்கும் பணிகள் மாறுபட்டது என்றால் சரிதான். சிறப்பு பணிகளுக்கு பணியமர்த்தப்பட்ட காவலர்களும், அதிகாரிகளும் அந்த பணியை மட்டும்தான் பார்ப்பார்கள் என்றும் தினசரி அல்லது அவர்களுடைய காவல் நிலைய அலுவல் பணியை பார்க்க வேண்டியது இல்லை என்றால் சரிதான். சிறப்புக்குழுவில் உள்ளவர்களை காவல் துறை கண்காணிப்பாளர் நியமிப்பார்.

ஒரு சிறப்புக்குழுவில் இருக்கும் ஒவ்வொரு உறுப்பினர்களையும் வேறு பணிக்கு மாற்றுவதாக இருந்தால் மாவட்ட கண்காணிப்பாளரின் உத்தரவு பெற வேண்டும் என்றால் சரிதான். என்னுடைய ஆளுமைக்கு கீழ் உள்ள காவல் நிலையங்களில் நடக்கின்ற அனைத்து அலுவல்ககளும் எனக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றால் அது முற்றிலும் சரியல்ல வழக்குகள் பதியப்படும் விவரங்களை எனக்கு தினசரி அலுவல் குறிப்பாக ஒவ்வொரு காவல் நிலையத்திலிருந்தும் எனக்கு தெரிவிப்பார்கள் அனுப்புவார்கள்.

அவ்வாறே மாவட்ட கண்காணிப்பாளரிடம் தெரிவிப்பார்கள். அது Daily Situation Register என்று நாங்கள் அழைப்போம். 16.06.2015 முதல் 18.06.2015 வரை பள்ளிக்கொண்டா காவல் நிலைய அதிகாரி (SHO) திரு. ரவி எஸ்எஸ்ஐ என்றால் சரிதான். 16.06.2015 முதல் 18.06.2015 வரை திரு. கோவிந்தசாமி அவர்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் ஆய்வாளராக இருந்தார் என்றால் ஷமீல் பாஷா இறப்பு தொடர்பாக வேப்பங்குப்பம் காவல் நிலைய ஆய்வாளர் திரு.

கோவிந்தசாமி முதல் தகவல் அறிக்கை பதிய நியமிக்கப்பட்டிருந்தார். பள்ளிக்கொண்டா காவல் நிலைய முத்துக்குமரன் என்பவர் எந்த பதவியில் இருந்தார் என்றால் சம்பவம் பத்து ஆண்டுகள் முன்பு நடந்தது நானும் பணி ஓய்வு பெற்று பத்து ஆண்டுகள் ஆவதால் ஆவணத்தை பார்த்து சொல்ல இயலும்.

டியூட்டி ரோஸ்டரில் தினசரி காவலருக்கு கொடுக்கின்ற பணி விவரங்களை வலது பக்கம் குறிப்போம், சிறப்பு பணி விவரங்களை அந்த பதிவேட்டில் இடது பக்கம் குறிப்போம். ஷமீல் பாஷாவை திரு.மார்டின் பிரேம்ராஜ் மற்றும் மற்ற ஆளினர்கள் விசாரித்தார்கள் என்று சிபிசிஐடி சொன்னதால் எஸ்எஸ்ஐ ரவி என்னிடம் சொன்னார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.37 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.03 17:51:41 +0530